## பெருநகர சென்னை மாநகராட்சி
## GREATER CHENNAI CORPORATION

# 2025 - 2026 ஆம்

# நிதி நிலை அறிக்கையில்

## **மாண்புமிகு மேயர்** அவர்களால்

## அறிவிக்கப்பட்ட திட்டங்கள் மீது

## மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் விவரம்

# 2025-2026ஆம் நிதியாண்டின் நிதி நிலை அறிக்கையில் மாண்புமிகு மேயர் அவர்களால் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் விபரம்

## கல்வித் துறை

அறிவிப்பு : 1

**81 சென்னை பள்ளிகளில் 10ஆம் வகுப்பு, 11 மற்றும் 12 ஆம் வகுப்பில் படிக்கும் ஆர்வமுள்ள மாணவ மாணவியர்களை தேர்ந்தெடுத்து கணிதம், அறிவியல், வரலாறு, புவியியல் மற்றும் பொது அறிவு ஆகிய பாடங்களை கற்றுத் தரும் ஆசிரியர்களைக் கொண்டு, போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்ள ஆலோசனைகள் வழங்கவும், போட்டித் தேர்விற்கு விண்ணப்பித்தல், விழிப்புணர்வு ஏற்படுத்துதல் போன்ற மாணவியர்கள் பணிகள் மேற்கொள்வதற்காகவும் மாணவ எண்ணிக்கைக்கு ஏற்ப, பள்ளி ஒன்றுக்கு ஊக்கத்தொகையாக ரூபாய் 15,000/- முதல் ரூபாய் 1,50,000/- வரை என்கிற அடிப்படையில் ரூபாய் 40.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.**

- வேலைவாய்ப்பிற்கான போட்டித் தேர்வுகளில் ஆலோசனை மற்றும் விழிப்புணர்வு வழங்கும் நிகழ்வு 07.10.2025 அன்று மாண்புமிகு மேயர் அவர்கள் தலைமையில் அம்மா மாளிகையில் துவக்கி வைக்கப்பட்டது.
- 07.10.2025 அன்று தெரிவு செய்யப்பட்ட 162 ஆசிரியர்களுக்கும் சம்பந்தப்பட்ட பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை துணை இயக்குநர் திருமதி. G.கவிதா, திருமதி.P.ரெங்கநாயகி, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் மற்றும் திருமதி.S.கலைவாணி, துணை இயக்குநர், மூலமாக மாநில தொழில் வழிகாட்டு மையத்தில் பயிற்சி அளிக்கப்பட்டது.

- அதன் தொடர்ச்சியாக அக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் ஆகிய மூன்று மாதங்களில் சிறப்பு பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மூலமாக மாணவர்களுக்கு போட்டி தேர்வுகளில் கலந்து கொள்வதற்கு தேவையான விழிப்புணர்வு வழங்கப்பட்டது. மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையை சார்ந்த அலுவலர்கள் அக்டோபர் 10 முதல் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பள்ளிக்கு சென்று மாணவர்களுக்கு பயிற்சியளித்தனர். அதற்கான கால அட்டவணைப் படி பயிற்சி பட்டறை செயல்படுத்தப்பட்டு, தற்போது 81 உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு பயிற்சி பட்டறை முடிவடைந்துள்ளது.

அறிவிப்பு : 2

**சென்னை பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு செய்தித்தாள் வாசிக்கும் பழக்கத்தினை வாக்குவித்து அதனடிப்படையில் குறிப்புகள் தயார் செய்யவும், வினாடி வினாப் போட்டிகள் நடத்திடவும், அந்தந்த பள்ளியின் தலைமை ஆசிரியரால், தமிழ், ஆங்கிலம் மற்றும் சமூக அறிவியல் பாடங்களின் ஆசிரியர்களைக் கொண்ட ஒரு குழு அமைத்து வினாத்தாள்கள் தயாரித்து, தேர்வுகள் நடத்தப்படும். அவற்றில், வெற்றி பெறும் மாணவ மாணவியர்களுக்கு பள்ளி மற்றும் மண்டலம் அளவிலான போட்டித் தேர்வுகள் நடத்தப்பட்டு அதில் வெற்றி பெறுபவர்களுக்கு பரிசுகளும், அக்குழுவில் சிறப்பாகப் பணியாற்றிய ஆசிரியர்களுக்கு ஊக்கத் தொகையும் வழங்கப்படும். இதனை மேற்கொள்ளும் வகையில் பள்ளி ஒன்றுக்கு ரூபாய் 15,000/- முதல் ரூபாய் 75,000/- வரை 211 பள்ளிகளுக்கு ரூபாய் 86.70 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.**

முதல் கட்டமாக, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில், வினாடிவினா போட்டி நடைபெற்றது. ஒவ்வொரு பள்ளியிலும் 6 முதல் 8ஆம் வகுப்பு வரை ஒரு குழுவாகவும், 9 மற்றும் 10ஆம் வகுப்பு வரை ஒரு குழுவாகவும் 11 மற்றும் 12ஆம் வகுப்பு வரை ஒரு குழுவாகவும், போட்டிகள் நடத்தப்பட்டு ஒவ்வொரு குழுவிலிருந்தும் முதல் மற்றும் இரண்டாம் இடம் பெற்ற 2 மாணவர்கள் வீதம் மொத்தம் 6 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இரண்டாம் கட்டமாக மண்டல அளவிலான வினாடி வினா போட்டிகள் 15.10.2025 அன்று நடத்தப்பட்டு 70 மாணவர்கள் இறுதி கட்டப் போட்டிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இரண்டாம் கட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 70 மாணவர்களைக் கொண்டு இறுதி கட்டமாக வினாடி வினா போட்டி டிசம்பர் மாதத்தில் முடிவுற்றது. அதில் 14 மாணவர்கள் வெற்றி பெற்றனர். அவர்களுக்கு பிப்ரவரி இறுதி வாரத்தில் மாண்புமிகு மேயர் அவர்களால் பரிசுகள் மற்றும் கேடயங்கள் வழங்கப்படவுள்ளது. பணிகள் நடைபெற்று வருகிறது.

அறிவிப்பு : 3

**சென்னை உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில், காலாண்டு மற்றும் அரையாண்டுத் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெறும் பள்ளிகளைக் கண்டறிந்து, அப்பள்ளிகளில் விருப்பத்துடன் பணியாற்ற விரும்பும் ஆசிரியர்களைக் கொண்டு, மண்டலம் வாரியாக "வளமிகு ஆசிரியர் குழு" (Pooling of Resource Teachers) அமைக்கப்படும். அக்குழுவின் ஆசிரியர்களைக் கொண்டு, அம்மண்டலத்திற்குட்பட்ட பள்ளி மாணவர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கப்படும். இதற்கான பாடக்குறிப்புகளை தயார் செய்யவும், பயிற்சி வழங்கும் பணிக்காகவும் மதிப்பூதியம் மற்றும் பிற செலவினங்களுக்காக ஒரு மண்டலத்திற்கு ரூபாய் 5.00 இலட்சம் வீதம் 15 மண்டலங்களுக்கு ரூபாய் 75.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.**

- ஒவ்வொரு மண்டலத்திலும் உள்ள 10 மற்றும் 12 ஆம் வகுப்பில் 2024-2025ஆம் கல்வியாண்டு பொது தேர்வில் அதிக மதிப்பெண்கள் மற்றும் அதிக தேர்ச்சி சதவிகிதத்தை தந்த ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வளமிகு ஆசிரியர் குழு உருவாக்கப்பட்டது.
- பத்தாம் வகுப்பு வாயிலாக தேர்வு செய்யப்பட்ட வளமிகு ஆசிரியர்களின் எண்ணிக்கை 124 மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு வாயிலாக தேர்வு செய்யப்பட்ட வளமிகு ஆசிரியர்களின் எண்ணிக்கை 186.

- மேற்கண்ட ஆசிரியர் குழுவினரைக் கொண்டு வினா விடை தொகுப்பு (EASY LEARNING MATERIAL) தயாரிக்கப்பட்டு, பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்புகளில் பயின்றுவரும், மெல்ல கற்கும் மாணாக்கர்களுக்கு வழங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.
- வினா விடை தொகுப்பு தயாரிக்க DTP செலவு – ரூ.1,38,367/-.
- வினா விடை தொகுப்பு அச்சடிக்க செலவு - ரூ.65,00,000/-.
- ஒவ்வொரு மண்டலத்திலும், வளமிகு ஆசிரியர் குழுவில் உள்ள ஆசிரியர்கள் அந்த மண்டலத்தில் உள்ள மற்ற ஆசிரியர்களுக்கு தேர்ச்சி சதவீதம் அதிகரிப்பதற்கான பயிற்சியை அளித்து வருகிறார்கள். பணிகள் முடிவுற்றது.

அறிவிப்பு : 4

சென்னை நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில், 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்கள் புவியியல் பாடத்தினை எளிதாக கற்கும் வகையில் ஒவ்வொரு வகுப்பறைக்கும் தலா ஒரு புவி உருண்டை (Globe) 2,300 வகுப்பறைகளுக்கு ரூபாய் 39.10 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

22.09.2025 அன்று மாண்புமிகு மேயர் அவர்களால் 211 பள்ளிகளுக்கு 2,300 புவி உருண்டை மாணவர்களின் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டது. பணிகள் முடிவுற்றது

அறிவிப்பு : 5

பெருநகர சென்னை மாநகராட்சியின் 69 நடுநிலைப் பள்ளிகள், 72 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும், மாணவ மாணவியர்களின் விளையாட்டுத் திறனை மேம்படுத்தி, பல்வேறு போட்டிகளில் கலந்து கொள்ளவும், கோப்பைகளை வெல்லவும் அவர்களுக்குப் பயிற்சி அளித்து தயார்படுத்தும் விதமாக ஒப்பந்த அடிப்படையில் தற்காலிக உடற்கல்வி ஆசிரியர்கள், நடுநிலைப் பள்ளிகளுக்கு மாதம் ரூபாய் 15,000/- உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு மாதம் ரூபாய் 18,000/- என்ற வகையில், மொத்தம் 141 உடற்கல்வி ஆசிரியர்கள் ஒப்பந்த அடிப்டையில் பணியமர்த்தப் படுவார்கள். இதற்கென ரூபாய்.2.34 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

YMCA உடற் கல்வி கல்லூரி மற்றும் தமிழ்நாடு விளையாட்டு பல்கலைக் கழகத்திலிருந்து தகுதி வாய்ந்த உடற்கல்வி ஆசிரியர்களின் பெயர் பட்டியல் பெறப்பட்டு நடுநிலைப்பள்ளிகளில் 63, உயர்நிலைப்பள்ளிகளில் 38 மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் 40 என மொத்தம் 141 தற்காலிக உடற்கல்வி ஆசிரியர்கள் பள்ளிகளில் பணி அமர்த்தப்பட்டு பணியாற்றி வருகின்றனர். பணிகள் முடிவுற்றது.

அறிவிப்பு : 6

**29 சென்னை மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்கள் பயனடையும் வகையில் விளையாட்டு மைதானங்களில் கூடைப் பந்து, எறி பந்து, கால் பந்து, இறகுப் பந்து, கோ-கோ, கபடி நீளம் தாண்டுதல் மற்றும் உயரம் தாண்டுதல் ஆகிய விளையாட்டுகளில் மாணவ மாணவியர்கள் தங்களை ஈடுபடுத்தி அவ்விளையாட்டு பயிற்சிகளை மேற்கொள்ள ஏதுவாக அப்பள்ளிகளின் தேவைகளுக்கேற்ப ரூபாய் 1.00 இலட்சம் முதல் 1.20 இலட்சம் வரை விளையாட்டு உபகரணங்கள் வழங்கிட ரூபாய் 35.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.**

29 மேல்நிலைப்பள்ளிகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் (Poll & Post) கொள்முதல் செய்து பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளது. பணிகள் முடிவுற்றது.

அறிவிப்பு : 7

**26 சென்னை உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்கள் பயனடையும் வகையில், கூடைப் பந்து, எறி பந்து, கால் பந்து, இறகுப் பந்து, கோ-கோ, கபடி, நீளம் தாண்டுதல் மற்றும் உயரம் தாண்டுதல் ஆகிய விளையாட்டுகளில் தங்களை ஈடுபடுத்தி பயிற்சிகள் மேற்கொள்ள ஏதுவாக அப்பள்ளிகளின் தேவைகளுக்கேற்ப ரூபாய் 1.15 இலட்சம் வீதம் விளையாட்டு உபகரணங்கள் வழங்கிட ரூபாய் 30.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.**

26 உயர்நிலைப்பள்ளிகளுக்கு விளையாட்டு கம்பங்கள் (Pole & Post) நிறுவப்பட்டு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டு மாணவ மாணவியர்களின் பயன்பாட்டில் உள்ளது. பணிகள் முடிவுற்றது.

அறிவிப்பு : 8

**50 சென்னை நடுநிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்கள் பயனடையும் வகையில் கூடைப் பந்து மற்றும் எறி பந்து விளையாட்டுகளில் தங்களை ஈடுபடுத்தி, பயிற்சிகள் மேற்கொள்ள ஏதுவாக அப்பள்ளிகளின் தேவைகளுக்கேற்ப ரூபாய் 60,000/- வீதம் விளையாட்டு உபகரணங்கள் வழங்கிட ரூபாய் 30.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.**

50 நடுநிலைப்பள்ளிகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் கொள்முதல் செய்து பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளது. பணிகள் முடிவுற்றது.

அறிவிப்பு : 9

**50 சென்னை நடுநிலைப்பள்ளிகளில் உள்ள விளையாட்டு மைதானங்கள் ஒவ்வொன்றும் தலா ரூபாய் 60,000/- என்ற அடிப்படையில் சமப்படுத்தி சீரமைக்க, ரூபாய் 30.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.**

50 பள்ளிகளில் விளையாட்டு மைதானங்கள் மாணவர்கள் பயன்படுத்தும் வகையில் சமன்படுத்தப்பட்டது. மாணவ மாணவியர்களின் பயன்பாட்டில் உள்ளது. பணிகள் முடிவுற்றது.

அறிவிப்பு : 10

**விளையாட்டில் சிறந்து விளங்கும் மாணவ மாணவியர்களைத் தேர்வு செய்து, அவர்கள் தடகளம் மற்றும் குழுப்போட்டிகளில் மண்டலம், மாவட்டம் மற்றும் மாநில அளவிலான போட்டிகளில் பங்கு பெறும் போது மாணவ மாணவியருக்கு பயணம் மற்றும் உணவுப்படியாக நாள் ஒன்றுக்கு தலா ரூபாய் 500/- வீதம் மொத்தம் ரூபாய் 62.55 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.**

24.12.2025 அன்று நடைபெற்ற விழாவில் மாண்புமிகு மேயர் அவர்களின் தலைமையில், தேசிய, மாநில, மாவட்டம் மற்றும் மண்டல அளவில் விளையாட்டு போட்டியில் பங்கு பெற்ற 6,236 மாணவ மாணவியர்களுக்கு பயணப்படி மற்றும் உணவுப் படியாக நாள் அடிப்படையில் வழங்கும் பணி துவக்கி வைக்கப்பட்டது. இதுவரை ரூ.35.70 இலட்சத்திற்கான காசோலைகள், அனைத்து மாணவர்களுக்கும் அவர்களின் வங்கிக் கணக்கில் அனுப்பப்பட்டுள்ளது. பணிகள் முடிவுற்றது.

அறிவிப்பு : 11

**சென்னை நடுநிலை, உயர்நிலை மற்றம் மேல்நிலைப் பள்ளிகளில் மாணவ மாணவியர்கள் தடகள போட்டியில தொடர்ச்சியாக மூன்று முறை பங்கு பெறுபவர்களுக்கு தலா ரூ.2,500/- மதிப்பிலான தரமான Sports Shoes வழங்க ரூ.25.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.**

மாநில, தேசிய அளவில் தடகளப் போட்டிகள் மற்றும் பிற போட்டிகளில் தொடர்ச்சியாக இரண்டு முறை வெற்றி பெற்ற 785 மாணாக்கர்களின் பெயர் பட்டியல் பெறப்பட்டு சிறப்பு திட்டத்துறை மூலம் காலணிகள் வாங்கப்பட்டு மாணவர்களின் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளது. பணிகள் முடிவுற்றது.

அறிவிப்பு : 12

**மகளிருக்கு சுய வேலை வாய்ப்பை ஏற்படுத்திடும் வகையில், இதற்கென உள்ள வழிகாட்டு நெறிமுறைகளின் படி, (Standard Operating Procedure) திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளான தையல் பயிற்சி, எம்பிராய்டரி, ஆரி வேலைப்பாடுகள், அழகுக்கலை மற்றும் Tally பயிற்சிகள் இலவசமாக வழங்கிட, ஒவ்வொரு மண்டலத்திலும் ஒரு மையம் அமைத்திட, மண்டலம் ஒன்றுக்கு ரூபாய் 50.00 இலட்சம் வீதம் 15 மண்டலங்களுக்கு ரூபாய் 7.50 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.**

மகளிருக்கு சுய வேலை வாய்ப்பை ஏற்படுத்தும் பொருட்டு 1 முதல் 15 வரை உள்ள மண்டலங்கள் வாரியாக பள்ளிகள் கண்டறியப்பட்டு, ஒரு மண்டலத்திற்கு 300 மகளிருக்கு பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டு, மண்டலம் 1 முதல் 15 வரை உள்ள பள்ளிகளில், தையல் பயிற்சி, ஆரி (Aari) பயிற்சி, எம்பிராய்டரி பயிற்சி ஆகிய பயிற்சிகள் இதுவரை 1,582 மகளிருக்கும், அழகுக்கலை (Beautician) பயிற்சி 1,460 மகளிருக்கும், Tally பயிற்சி 1,310 மகளிருக்கும் நவம்பர்-2025 முதல் அந்தந்த மண்டலங்களில் உள்ள பள்ளிகளில் நடத்தப்பட்டு வருகின்றது. பணிகள் முடிவுற்றது.

அறிவிப்பு : 13

**சென்னை பள்ளிகளில் 414 மழலையர் வகுப்பறைகள் செயல்பட்டு வருகிறது. இப்பள்ளிகளில் பயிலும் மழலையர்களுக்கென தனியே பதிவு செய்யப்பட்ட பாடங்கள், பாடல்கள் மற்றும் குட்டிக்கதைகளை அக்குழந்தைகளுக்கு மின்னணு பலகை (Display) வாயிலாக காண்பிக்க ஒவ்வொரு வகுப்பறைக்கும் ரூபாய் 40,000/- வீதம் ரூபாய் 1.66 கோடி மதிப்பில் நிறுவப்படும்.**

முதற்கட்டமாக 35 சென்னை மழலையர் பள்ளிகளுக்கு தலா 1 மின்னணு பலகை வழங்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளது. இத்திட்டம் குழந்தைகளிடையே ஏற்படும் ஆர்வத்தின் அடிப்படையில் மற்ற மழலையர் பள்ளிகளிலும் நடைமுறைப்படுத்தப்படும். பணிகள் நடைபெற்று வருகின்றன.

அறிவிப்பு : 14

**சென்னை உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு காட்சி வழியாக பாடங்களை விளக்குவதால் அம்மாணவர்கள் அதனை எளிதில் புரிந்து கொண்டு, தேர்வில் நல்ல மதிப்பெண்களைப் பெற்றிடும் வகையில் 81 பள்ளிகளுக்கு தலா இரண்டு வீதம் 162 பெரிய அளவிலான மின்னணு பலகைகள் (Display) தலா ரூபாய் 40,000/- மதிப்பீட்டில் வாங்கி நிறுவ ரூபாய் 64.80 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.**

முதற்கட்டமாக 81 உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளுக்கு தலா 2 எண்ணிக்கை வீதம் 162 எண்ணிக்கையிலான மின்னணு பலகைகள் கொள்முதல் செய்வதற்கு ஆணையர் அவர்களின் அனுமதி பெறப்பட்டுள்ளது. அறிவிப்பு 13-ன் வெற்றித் தன்மையை பொறுத்து இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். பணிகள் நடைபெற்று வருகின்றன.

அறிவிப்பு : 15

**சென்னை பள்ளிகளில் 9ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்கள் அவர்தம் ஆங்கிலப் பேச்சாற்றலை வளர்த்துக்கொள்ளவும், நேர்முகத் தேர்வுகளை எதிர்கொள்ளும் விதமாக அவர்களுக்கு MEPSC சான்றிதழ் பெற்ற பயிற்சியாளர்களின் வாயிலாக வரும் கல்வி ஆண்டில் பயிற்சி வழங்கப்படும். இதற்கென ரூபாய் 20.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.**

EZ வித்யா நிறுவனம் மூலம் 35 மேல்நிலைப் பள்ளிகளிலும் ஜூலை மாதத்தில் Baseline assessment முடிக்கப்பட்டு. ஆங்கில பேச்சாற்றல் வகுப்புகள் 35 மேல்நிலைப் பள்ளிகளில், அட்டவணைப்படி மொத்தம் 20 Module நடத்தி முடிக்கப்பட்டது. Endline Assessment நடத்தப்பட்டுள்ளது. பணிகள் முடிவுற்றது.

அறிவிப்பு : 16

**பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட 100 பள்ளிகளில் செயல்பட்டு வரும் மழலையர் வகுப்பறைகளில் (LKG மற்றும் UKG) குழந்தைகள் மகிழ்ச்சியாக மற்றும் ஆரோக்கியமான சூழலில் கல்வி கற்க ஏதுவாக அவ்வகுப்பறைகளின் சுவற்றில் வர்ணம் மரச்சாமான்கள் பொருத்துதல், பூசுதல், வண்ணப்படங்கள் வரைதல், குழந்தைகள் அமர்வதற்காக வண்ணங்களில் வட்ட மேசைகள் மற்றும் நாற்காலிகள் அமைத்துக் கொடுக்க ரூபாய் 3.00 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.**

100 மழலையர் பள்ளி, வகுப்பறைகளில் (LKG மற்றும் UKG) குழந்தைகள் மகிழ்ச்சியாக மற்றும் ஆரோக்கியமான சூழலில் கல்வி கற்க ஏதுவாக 100 வகுப்பறைகளில் வர்ணம் பூசுதல் மற்றும் மரச்சாமான்கள் நிறுவப்பட்டு பணி முடிக்கப்பட்டது. 35 வகுப்பறைகளுக்கு மேசைகள் மற்றும் நாற்காலிகள் வழங்கப்பட்டது. மீதமுள்ள 65 வகுப்பறைகளுக்கு மேசைகள் மற்றும் நாற்காலிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பணிகள் நடைபெற்று வருகிறது.

## பொது சுகாதாரத் துறை

அறிவிப்பு : 17

**பெருநகர சென்னை மாநகராட்சியில், அனைத்து மயான பூமிகளிலுள்ள தகன மேடைகளுக்கு தடையின்றி மின்சாரம் கிடைக்க ஏதுவாக மின்னாக்கிகள் (Generator) ரூபாய் 15 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும். மேலும், இவற்றிற்குத் தேவையான எரிபொருள் கொள்முதல் செய்வதுடன் தொடர் பராமரிப்பும் மேற்கொள்ளப்படும்.**

மண்டலம்- 2, 3, 4, 5, 6, 8, 10, 11, 12, 13, 14, 15 ஆகிய மண்டலங்களில் 25 மயான பூமிக்கு மின்னாக்கிகள் (Generator) அமைத்து 5 ஆண்டுகள்

பராமரிக்கும் பணி மேற்கொள்ள ரூ.3.38 கோடி மதிப்பீட்டில் பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. மின்னாக்கிகள் அமைப்பதற்கான அடித்தளம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணி 28.02.2026க்குள் பணி முடிக்கப்படும். பணிகள் நடைபெற்று வருகின்றன.

அறிவிப்பு : 18

**தலைமையகம் மற்றும் 15 மண்டலங்களில் உள்ள பிறப்பு மற்றும் இறப்புப் பதிவேடுகள் மற்றும் படிவங்களை ஆவணப்படுத்தி, பாதுகாத்து பராமரிக்க, அதற்கான உட்கட்டமைப்பு வசதிகளுடன் பிறப்பு மற்றும் இறப்பு பிரிவுகளை ஆவண காப்பகமாக மேம்படுத்த ரூபாய் 5.00 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.**

பிறப்பு மற்றும் இறப்புப் பதிவேடுகள் மற்றும் படிவங்களை ஆவணப்படுத்தி, பாதுகாத்து பராமரிக்க, 1 முதல் 5 வரை உள்ள மண்டலங்களுக்கு 78 அலமாரிகளும், 6 முதல் 10 வரை உள்ள மண்டலங்களுக்கு 220 அலமாரிகளும், 11 முதல் 15 வரை உள்ள மண்டலங்களுக்கு 82 அலமாரிகள் என மொத்தம் 380 அலமாரிகளுக்கு (ஒரு அலமாரிக்கு ரூ.8,315/- என்ற வீதம்) ரூ.40.00 இலட்சம் மதிப்பீட்டில் டான்சி நிறுவனத்திலிருந்து கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. படிவங்களை ஆவணப்படுத்தம் பணிகள் நடைபெற்று வருகிறது. பணிகள் முடிவுற்றது.

அறிவிப்பு : 19

**முதியோர்களின் நலன் பேணும் வகையில் முதற்கட்டமாக, வடக்கு வட்டாரத்தில் பி.ஆர்.என் கார்டன், மத்திய வட்டாரத்தில் செம்பியம் மற்றும் தெற்கு வட்டாரத்தில் துரைப்பாக்கம் ஆகிய இடங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் தலா மையத்திற்கு ரூபாய் 30.00 இலட்சம் வீதம் 3 மையத்திற்கு ரூபாய் 90.00 இலட்சம் செலவில் முதியோர்களுக்கென தனிப் பிரிவு புதியதாக தொடங்கப்படும். இப்பிரிவில் ஒரு மருத்துவ ஆலோசகர், ஒரு இயன்முறை சிகிச்சை நிபுணர் மற்றும் இரண்டு உதவியாளர்கள் பணியாற்றுவார்கள்.**

முதியோர்களின் நலம் பேணும் வகையில் முதல்கட்டமாக முதியோர்களுக்கென தனிப்பிரிவை துவக்குவதற்கு, தேசிய முதியோர் நல மருத்துவமனை நிபுணர்களை கலந்தாலோசித்து அவர்களின் அறிவுரையின் படி அறிவிப்பில் தெரிவித்துள்ள இடங்களில் துவக்கப்பட்டுள்ளது. மையத்திற்கு தேவையான உபகரணங்கள் ரூ.9.75 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. வடக்கு மற்றும் தெற்கு வட்டாரங்களில் ஒரு மருத்துவ ஆலோசகரும், ஒரு இயன்முறை சிகிச்சை நிபுணரும், மத்திய வட்டாரத்தில் ஒரு மருத்துவ ஆலோசகரும் நியமிக்கப்பட்டு மையம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. பணிகள் முடிவுற்றது.

அறிவிப்பு : 20

**பெருநகர சென்னை மாநகராட்சியில், தமிழ்நாடு விலங்குகள் நல வாரியம் மற்றும் விலங்குகள் நல ஆர்வலர்களின் ஒத்துழைப்புடன் ரூபாய் 3.00 கோடி செலவில் 1.80 லட்சம் தெரு நாய்களுக்கு வெறிநாய்க்கடி நோய்த் தடுப்பூசி மற்றும் ஒட்டுண்ணி நீக்கும் மருந்து செலுத்தப்படும்.**

தெருநாய்களுக்கு வெறிநாய்க்கடி நோய்த் தடுப்பூசி மற்றும் ஒட்டுண்ணி நீக்கும் மருந்து செலுத்தும் திட்டம் 09.08.2025 முதல் 31.12.2025 வரை அனைத்து மண்டலங்களிலும் உள்ள சுமார் 1,47,538 எண்ணிக்கையிலான தெரு நாய்களுக்கு வெறி நாய்க்கடி நோய்த் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. பணிகள் முடிவுற்றது.

அறிவிப்பு : 21

**பெருநகர சென்னை மாநகராட்சியில் அனைத்து சுகாதார நிலையங்களில் உள்ள மருந்து காப்பக அறைகளின் அளவுக்கு ஏற்ற வகையில் குளிரூட்டு (AC) வசதிகள் செய்ய ரூபாய் 3.00 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.**

1 முதல் 15 மண்டலங்களில் உள்ள 267 சுகாதார நிலையங்களில் 551 எண்ணிக்கையிலான குளிரூட்டிகள் ரூ.5.48 கோடி மதிப்பீட்டிற்கு நிர்வாக

அனுமதி பெறப்பட்டு, வாட்டாரம் வாரியாக பணி ஆணைகள் வழங்கப்பட்டு 8 மண்டலங்களில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. 7 மண்டலங்களில் பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணிகள் 28.02.2026க்குள் முடிக்கப்படும். பணிகள் நடைபெற்று வருகிறது.

அறிவிப்பு : 22

**சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள மாநகர ஆரம்ப சுகாதார நிலையத்தை விரிவாக்கம் செய்யும் பொருட்டு ரூபாய் 2.50 கோடி செலவில் பொது மக்கள் பயன் பெறும் வகையில் ஒரு புதிய கட்டடம் கட்டப்படும்.**

சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள மாநகர ஆரம்ப சுகாதார நிலையத்தை விரிவாக்கம் செய்யும் பணிக்கு ரூ.4.46 கோடி மதிப்பீட்டில் திருவாளர்கள் RTI பவுன்டேஷன் நிறுவனத்திற்கு 29.08.2025 அன்று பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. தற்போது பழைய கட்டடத்தை இடிக்கும் பணி முடிவுற்றது. புதிய கட்டடம் கட்டும் பணி நடைபெறுகிறது. உத்தேசமாக 31.05.2026ல் பணி முடிக்கப்படும். பணிகள் நடைபெற்று வருகிறது.

அறிவிப்பு : 23

**பொது மக்கள் பயன்பாட்டிற்காக பெருநகர சென்னை மாநகராட்சியில், புதியதாக கட்டப்பட்டுள்ள 22 மாநகர ஆரம்ப சுகாதார நிலையங்களில் மின்தூக்கி (Lift) வசதிகள் ஏற்படுத்திட ரூபாய் 5.00 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.**

மண்டலம்-1,4,5,6,7,8,9,13,14 மற்றும் 15 ஆகிய மண்டலத்திற்குட்பட்ட 22 மாநகர ஆரம்ப சுகாதார நிலையங்களில் 22 எண்ணிக்கையிலான மின்தூக்கி (Lift) வசதிகள் ஏற்படுத்திட ரூ.8.03 கோடி பணி ஆணை வழங்கப்பட்டு, 21 இடங்களில் பணிகள் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள ஒரு பணி பிப்ரவரி 2026 இறுதிக்குள் முடிக்கப்படும். பணிகள் நடைபெற்று வருகிறது.

அறிவிப்பு : 24

**மண்டலம் 1, 2, 3, 4, 5, 7, 8, 11, 13 மற்றும் 14 ஆகிய பத்து மண்டலங்களில் தற்போது புதியதாக கட்டப்பட்டு வரும் நாய் இனக்கட்டுப்பாட்டு மையங்களில் கூடுதலாக வளர்ப்புப் பிராணிகளுக்கான மருத்துவமனைகள் ரூபாய்.15.00 இலட்சம் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.**

வளர்ப்பு பிராணிகளுக்கான மருத்துவமனை ஏற்படுத்துவதற்கான இடங்கள் தேர்வு செய்யப்பட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறன்றன. தற்போது மண்டலம்-1, 2 மற்றும் 3ல் கட்டுமான பணிகள் நிறைவுற்று பயன்பாட்டில் உள்ளது. மற்ற இடங்களில் பணிகள் நடைபெற்று வருகிறது.

அறிவிப்பு : 25

**மண்டலம் 10, கோட்டம் 141 கண்ணம்மாபேட்டையில் இயங்கி வரும் செல்லப்பிராணிகள் மருத்துவமனை வளாகத்தில், விபத்துகளினால் காயமடைந்த செல்லப்பிராணிகளுக்கு சிறப்பு அவசர சிகிச்சை மையம் ரூபாய் 25.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

மண்டலம்-12, கோட்டம்-158, நந்தம்பாக்கம் பகுதியில் கட்டப்பட்டு வரும் புதிய நாய்கள் இனக்கட்டுப்பாட்டு மைய வளாகத்தில், விபத்துகளினால் காயமடைந்த செல்லப்பிராணிகளுக்கான சிறப்பு அவசர சிகிச்சை மையம் அமைக்கப்படும். பணிகள் நடைபெற்று வருகிறது.

அறிவிப்பு : 26

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட வட சென்னையில் மூலக்கொத்தளம் மயான பூமியில், இறந்த செல்லப்பிராணிகளை அடக்கம் செய்ய வசதிகள் ஏற்படுத்தப்படும்.**

மண்டலம்-5, கோட்டம்-53ல் மூலக்கொத்தளம் மயான பூமி வளாகத்தில் இறந்த செல்லப்பிராணிகளை அடக்கம் செய்வதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டு பெயர் பலகை நிறுவப்பட்டு செல்லப்பிராணிகளின் உரிமையாளர்கள் பயன்படுத்தி வருகின்றனர். பணிகள் முடிவுற்றது.

## மருத்துவ சேவைகள் துறை

அறிவிப்பு : 27

**பெருநகர சென்னை மாநகராட்சி, மருத்துவ சேவைகள் துறையின் கீழ் இயங்கும் 16 நகர்ப்புர சமுதாய நல மையங்கள் மற்றும் 24 மணி 3 மகப்பேறு மருத்துவமனைகள் நேரமும் செயல்படும் 19 கிருமிநாசினி 19 மருத்துவமனைகளுக்கும் தலா ஒன்று வீதம் புகைக்கருவிகள் (Fogger Machine) தமிழ்நாடு மருத்துவ சேவைகள் கழகத்திடமிருந்து (TNMSC) ரூபாய்.10.00 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.**

கிருமிநாசினி புகைக்கருவிகள் மண்டலம் 1 முதல் 15 வரை உள்ள மருத்துவ மண்டலங்களின் கீழ் வரும் 19 மருத்துவமனைகளுக்கு கொள்முதல் செய்து வழங்கப்பட்டுள்ளது. பணிகள் முடிவுற்றது.

அறிவிப்பு : 28

**பெருநகர சென்னை மாநகராட்சி மருத்துவ சேவைகள் துறையின் கீழ் இயங்கும் 16 நகர்ப்புற சமுதாய நல மையங்கள் (UCHC) மற்றும் 24 மணி நேரமும் செயல்படக்கூடிய 3 மகப்பேறு மருத்துவமனைகளுக்கு, மின் அதிர்வலைகள் மூலம் சீரற்ற இதயத் துடிப்பை சீராக்க உதவும் கருவிகள் (Defibrillator) மருத்துவமனைக்கு ஒன்று வீதம் 19 கருவிகள் தமிழ்நாடு மருத்துவ சேவைகள் கழகத்திடமிருந்து (TNMSC) ரூபாய் 51.00 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.**

மின் அதிர்வலைகள் மூலம் சீரற்ற இதயத் துடிப்பை சீராக்க உதவும் கருவிகள் (Biphasic Defibrillator) மண்டலம் 1 முதல் 15 வரை உள்ள மருத்துவ மண்டலங்களின் கீழ் வரும் 19 மருத்துவமனைகளுக்கு கொள்முதல் செய்து வழங்கப்பட்டுள்ளது. பணிகள் முடிவுற்றது.

அறிவிப்பு : 29

**15 மருத்துவ மண்டலங்களில் இயங்கும் 140 நகர்ப்புர ஆரம்ப சுகாதார மையங்கள் (UPHC), 16 நகர்ப்புற சமுதாய நல மையங்கள் 3 எண்ணிக்கையிலான 24 மணி நேர மகப்பேறு (UCHC) மற்றும் மையங்களுக்குத் (EOC) தேவைப்படும், மருத்துவ உபகரணங்கள், குழந்தைகளுக்கான தடுப்பூசி மருந்துகள் ஆகியவற்றினை குளிரூட்டப்பட்ட நிலையில் பராமரிக்கவும், ஊட்டச்சத்து பெட்டகங்கள் (Nutrition Kits) மற்றும் மருத்துவமனைகளுக்குத் தேவையான அனைத்து மருத்துவப் பொருட்களை சேமிக்கவும் மற்றும் அப்பொருட்கள் சார்ந்த பதிவேடுகளைப் பராமரிக்க ஏதுவாக, மண்டலம் 6, வார்டு 75, அம்பாள் நகர், ஏ.கே. சாமி தெருவில் பயன்பாட்டில் இல்லாத நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலைய கட்டடத்தினை இடித்துவிட்டு அவ்விடத்தில், 2000 சதுர அடி பரப்பளவில் மின்தூக்கி (Lift), சாய்தளம், மின்னாக்கி (Generator) மற்றும் குளிரூட்டு (AC) வசதியுடன் கூடிய தரைதளம் மற்றும் இரண்டு அடுக்கு கட்டடம் கட்ட ரூபாய் 2.50 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.**

ஊட்டச்சத்து பெட்டகங்கள் (Nutrition Kits) மற்றும் மருத்துவமனைகளுக்குத் தேவையான அனைத்து மருத்துவப் பொருட்களை சேமிக்கவும் மற்றும் அப்பொருட்கள் சார்ந்த பதிவேடுகளைப் பராமரிக்க ஏதுவாக, மின்தூக்கி (Lift), சாய்தளம், மின்னாக்கி (Generator) மற்றும் குளிரூட்டு (AC) வசதியுடன் கூடிய தரைதளம் மற்றும் இரண்டு அடுக்கு கட்டடம் கட்டும் பணிக்கு ரூ.3.63 கோடி மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு திருவாளர்கள் KSK Engineers நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. தற்போது பழைய கட்டடம் இடிக்கும் பணி முடிவடைந்துள்ளது. பணிகள் நடைபெற்றுவருகிறது.

# இயந்திரப் பொறியியல் துறை

அறிவிப்பு : 30

**பெருநகர சென்னை மாநகராட்சியில் உட்புறச் சாலைகள் உள்ளிட்ட அனைத்து சாலைகளின் ஓரங்களில் படிந்துள்ள மண் துகள்கள் மற்றும் குப்பைகளை போக்குவரத்திற்கு இடையூறின்றி பெருக்கி, உறிஞ்சியெடுத்து (Ride on sweeping cum suction vehicle) ரூபாய் 40.00 இலட்சம் மதிப்பீட்டில் 20 வாகனங்கள் கொள்முதல் செய்ய ரூபாய் 8.00 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.**

மண் துகள்கள் மற்றும் குப்பைகளை போக்குவரத்திற்கு இடையூறின்றி பெருக்கி, உறிஞ்சியெடுக்கும் (Ride on sweeping cum suction vehicle) இயந்திரம் வடக்கு வட்டாரத்திற்கு 10 எண்ணிக்கையிலும், மத்திய வட்டாரத்திற்கு 10 எண்ணிக்கையிலும், தலா ரூ.399.50 இலட்சம் மதிப்பீட்டில் இரண்டு வட்டாரத்திற்கு என மொத்தம் ரூ.799 இலட்சம் மதிப்பீட்டி வாகனங்கள் கொள்முதல் செய்து பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. பணிகள் முடிவுற்றது.

அறிவிப்பு : 31

**பெருநகர சென்னை மாநகராட்சியில் பல்வேறு பணிகளுக்காக பயன்படுத்தப்பட்டு வரும் டீசல் மற்றும் பெட்ரோல் வாகனங்களினால் ஏற்படும் காற்று மாசினை கட்டுப்படுத்தும் விதமாக, அவ்வாகனங்கள் படிப்படியாக இயற்கை எரிவாயு (CNG) மற்றும் மின்சாரம் (EV) மூலம் இயங்கும் வாகனங்களாக மாற்றம் செய்யப்படும்.**

CNG மூலம் இயங்கும் நாய் பிடிக்கும் வாகனங்கள் 6 எண்ணிக்கையில் ரூ.35 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்து பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

CNG மூலம் இயங்கும் மாடு பிடிக்கும் வாகனங்கள் 8 எண்ணிக்கையில் ரூ.258 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

CNG மூலம் இயங்கும் Jet Washer Equipment Mounted on Mini Truck வாகனம் 6 எண்ணிக்கையில் ரூ.84 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்து பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

இனி வருங்காலங்களில் மாநகராட்சி பணிகளுக்கு CNG / EV வாகனங்கள் கொள்முதல் செய்வது தொடர்ந்து கடைபிடிக்கப்படும். பணி முடிவுற்றது.

## வருவாய்த் துறை

அறிவிப்பு : 32

**சொத்து வரி மதிப்பீடு, பெயர் மாற்றம் திருத்தத்திற்கான இறுதி ஆணை அறிவிப்பு, புதிய மற்றும் புதுப்பிக்கும் தொழில் உரிமங்கள், தொழில் வரி வழங்கும் அறிவிப்புகளுக்கு புதிதாக QR Code வசதி ஏற்படுத்தப்படும். இதனால், எவ்வித சிரமும் இன்றி உடனடியாக வரிகளை செலுத்த இயலும்.**

சொத்து வரி மதிப்பீடு, பெயர் மாற்றம் திருத்தத்திற்கான இறுதி ஆணை அறிவிப்பில் QR Code வசதி ஏற்படுத்தப்பட்டு மாண்புமிகு மேயர் அவர்களால் 25.08.2025 அன்று துவக்கி வைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. பணி முடிவுற்றது.

அறிவிப்பு : 33

**பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள அனைத்து மண்டல அலுவலகங்கள், பகுதி அலுவலகங்கள், வார்டு அலுவலகங்கள் மற்றும் சேவைத் துறைகளான சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய**

அலுவலகங்கள், தமிழ்நாடு மின்சார வாரிய அலுவலகங்கள் மற்றும் அரசு இ-சேவை மையங்கள் ஆகிய இடங்களில் எளிதாக வரி செலுத்துவதற்கு ஏதுவாக QR Code அச்சிட்ட அட்டைகள் பொருத்தப்படும்,

இதற்கான பணிகள் (QR Code) தகவல் தொழில்நுட்ப பிரிவு மூலம் பெற்று QR Code Board தயாரிக்கும் பணி முடிவு பெற்றது. மாண்புமிகு மேயர் அவர்களால் 25.08.2025 அன்று துவக்கிவைக்கப்பட்டது. பணி முடிவுற்றது.

அறிவிப்பு : 34

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான வணிக வளாகத்தில் வாடகைக்கு ஒதுக்கப்பட்டுள்ள கடைகளின் ஒவ்வொரு வாடகைதாரருக்கும் தனித்தனியாக வாடகை மற்றும் சரக்கு மற்றும் சேவை வரி (GST) செலுத்துவதற்கு ஏதுவாக QR Code அச்சிட்ட அட்டைகள் அந்தந்த கடைகளில் பொருத்தப்படும். இதனைப் பயன்படுத்தி வாடகைதாரர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி இணையதளம் வாயிலாக உரிய வாடகையை நேரடியாக காலதாமதமின்றி செலுத்தும் வசதி ஏற்படுத்தப்படும்.

கடைகளின் ஒவ்வொரு வாடகைதாரருக்கும் தனித்தனியாக வாடகை மற்றும் சரக்கு மற்றும் சேவை வரி (GST) செலுத்துவதற்கு ஏதுவாக QR Code அச்சிட்ட அட்டைகள் தயாரிக்க (QR code ) தகவல் தொழில்நுட்ப பிரிவு முலம் பெறப்பட்டு QR CODE BOARD தயாரித்து பயன்பாட்டிற்கு கொண்டுவர மாண்புமிகு மேயர் அவர்களால் 25.8.2025 அன்று துவங்கிவைக்கப்பட்டது. பணி முடிவுற்றது.

அறிவிப்பு : 35

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இடங்களில் பொதுமக்களுக்கு, அடிப்படை வசதிகளுடன் சுகாதாரமான சூழ்நிலை கொண்ட உணவு விற்பனை மண்டலங்கள் (Food Court) ஏற்படுத்திடும் வகையில், முதற்கட்டமாக வரும் நிதி ஆண்டில் இரண்டு இடங்களில் செயல்படுத்தப்படும்.

அடிப்படை வசதிகளுடன் சுகாதாரமான சூழ்நிலை கொண்ட உணவு விற்பனை மண்டலங்கள் (Food Court) இந்திரா நகர் 3வது அவென்யு (Shopping Complex) வார்டு-173 மண்டலம்-13ல் உணவு மையம் அமைக்கும் பணிக்கு திருவாளர்கள் BSM Constructions நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. ஏற்கனவே இருந்த கட்டடத்தை இடிக்கும் பணிகள் கட்டடத் துறையின் வழியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. புதியதாக Food Court அமைக்கும் பணி விரைவில் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும். பணி நடைபெற்று வருகிறது.

## பேருந்து சாலைகள் துறை

அறிவிப்பு : 36

**பெருநகர சென்னை மாநகராட்சியில், 200 எண்ணிக்கையிலான புதிய பேருந்து நிழற்குடைகள் சுமார் ரூபாய் 30.00 கோடி செலவில் அமைக்கப்படும்.**

புதிய பேருந்து நிழற்குடைகள் அமைக்கும் பணியை மேற்கொள்ள கள ஆய்வு செய்யப்பட்டதில், அனைத்து பேருந்து நிறுத்தங்களிலும் 3D வடிவ பேருந்து நிறுத்த நிழற்குடைகள் அமைக்க சாத்தியக்கூறு இல்லாத காரணத்தால் 71% 3D வடிவ பேருந்து நிழற்குடை மற்றும் 29% துருபிடிக்காத எஃகினால் ஆன நிழற்குடைகள் 1 முதல் 15 மண்டலங்களில், 120 இடங்களில் பேருந்து நிறுத்த நிழற்குடைகளுக்கு ரூ.14.48 கோடிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. தற்போது ஒப்பம் கோரப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. பணிகள் நடைபெற்று வருகிறது.

அறிவிப்பு : 37

**ஈக்காட்டுத்தாங்கல், மேற்கு சைதாப்பேட்டை மற்றும் கிண்டி ரேஸ் கோர்ஸ் சாலை ஆகிய இடங்களில் ஆஸ்பெஸ்டாஸ் கூரையாக அமைந்துள்ள பேருந்து நிறுத்தங்களை தரம் உயர்த்தி இழுவிசை கூரையாக (Tensile Roof) மேம்படுத்திட ரூபாய் 4.47 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.**

கிண்டி ரேஸ் கோர்ஸ் சாலையில் உள்ள பேருந்து நிலையத்தை ரூ.164.60 இலட்சம் மதிப்பீட்டில் தரம் உயர்த்த 21.04.2025 அன்று பணி ஆணை வழங்கப்பட்டது. கிண்டி ரேஸ் கோர்ஸ் சாலையில் சிறப்பு திட்டங்கள் துறை மூலம் (Special Projects) முழுமையான சாலை மேம்பாட்டு திட்டம் (Complete Street) தற்சமயம் முடிவடைந்துள்ளது. அதைத் தொடர்ந்து பேருந்து நிறுத்த கட்டுமான பணிகள் போக்குவரத்து காவல்துறை அனுமதி 05.02.2026 அன்று பெற்று பணிகள் துவக்கப்பட்டுள்ளது. தற்போது வரை 25% பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பணிகள் மார்ச் 2026க்குள் முடிக்கப்படும்.

மேற்கு சைதாப்பேட்டையில் உள்ள பேருந்து நிலையத்தை தரம் உயர்த்த ரூ.76.50 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தம் மேற்கொண்டு 21.05.2025 அன்று பணி ஆணை வழங்கப்பட்டு கட்டுமான பணிகள் (Civil Work. Toilet Work) நிறைவுறும் தருவாயில் உள்ளது. இழுவிசையிலான கட்டுமான பணிகள் (Fabrication Works) மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. தற்போது 47% பணிகள் முடிவடைந்துள்ளது. மீதமுள்ள பணிகள் மார்ச் மாதம் 2026க்குள் முடிக்கப்படும்.

ஈக்காட்டுத்தாங்கள் சாலையில் உள்ள பேருந்து நிலையத்தை தரம் உயர்த்த ரூ.168.40 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தம் மேற்கொண்டு 25.07.2025 அன்று பணி ஆணை வழங்கப்பட்டு கட்டுமான பணிகள் (Civil Work) முடிவடைந்துள்ளது. இழுவிசை கூரை கட்டுமான (Fabrication Work) பொருட்கள் தயார் நிலையில் உள்ளன. 05.02.2026 அன்று போக்குவரத்து காவல்துறையின் அனுமதி பெறப்பட்டுள்ளது. தற்போது 40% பணிகள் முடிவடைந்துள்ளது. மீதமுள்ள பணிகள் மார்ச் மாதம் 2026க்குள் முடிக்கப்படும்.

அறிவிப்பு : 38

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மணலி (மண்டலம்-2 வார்டு 21), IOCL (மண்டலம் 4 வார்டு 38), டோல்கேட் (மண்டலம் 4 வார்டு 39) மற்றும் சாலிகிராமம் (மண்டலம் 10 வார்டு 128) ஆகிய நான்கு இடங்களில் அமைந்துள்ள பேருந்து முனையங்கள் ரூபாய் 16.00 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.**

மணலி பேருந்து முனையம் அமைக்க ரூ.475 இலட்சம் மதிப்பீட்டிற்கு பணி ஆணை வழங்கப்பட்டு மண்டலம்-2ன் வழியாக பணிகள் நடைபெற்று வருகிறது. பணிகள் நடைபெற்று வருகிறது.

சுங்கசாவடி பேருந்து முனையம் அமைக்க ரூ.205 இலட்சம் மதிப்பீட்டிற்கு பணி ஆணை வழங்கப்பட்டு கட்டுமான பணிகள் (Civil Works – Office room and Toilet) நிறைவுற்றது. இழுவிசையிலான கட்டுமான பணிகள் (Fabrication Work) நடைபெற்று வருகிறது. பணிகள் நடைபெற்று வருகிறது.

## பூங்கா மற்றும் விளையாட்டுத்திடல்கள் துறை

அறிவிப்பு : 39

**விளையாட்டு வீரர்கள் பயிற்சி பெறுவதற்கு ஏதுவாக விளையாட்டுத்திடல்களை மேம்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும். எனவே பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 150 விளையாட்டுத் திடல்களில் ரூபாய் 20.00 கோடி மதிப்பீட்டில் புதிய விளையாட்டு உபகரணங்கள் அமைக்கப்படும்.**

அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள திட்டங்களுக்கான பணிகள் பின்வருமாறு நடைபெற்று வருகிறது.

| மண்டலம் | பணி எண்ணிக்கை | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | பணி ஆணை வழங்கப்பட்ட நாள் | முடிக்கப்பட்ட பணிகள் | நடைபெற்று வரும் பணிகள் | தொடங்கப்படவுள்ள பணிகள் | பணி முடிவடையும் காலம் | கைவிடப்பட்ட பணிகள் | தொகுப்பு எண் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| I | 5 | 88.54 | 09.05.2025 | 5 | - | - | முடிக்கப்பட்டது | - | 4&11 |
| II | 18 | 205.84 | 09.05.2025 | 16 | 2 | - | 28.2.2026 | - | 5 |
| III | 15 | 145.95 | 08.04.2025 | 14 | 1 | - | 28.2.2026 | - | 1&11 |
| IV | 36 | 564.33 | 09.05.2025 | 28 | 7 | | 28.2.2026 | 1 | 2,3,4,11 &14 |
| V | - | - | - | - | - | - | | - | |
| VI | 5 | 93.65 | 21.05.2025 | 4 | - | | 28.2.2026 | 1 | 12%14 |
| VII | 4 | 57.57 | 16.05.2025 | 4 | | - | முடிக்கப்பட்டது | - | 12 |
| VIII | 21 | 288.28 | 07.05.2025 | 19 | 2 | - | 28.2.2026 | - | 6 &7 |
| IX | - | - | - | - | - | - | | - | |
| X | 11 | 186.43 | 26.05.2025 | 9 | 2 | - | 28.2.2026 | - | 8 |
| XI | 3 | 44.00 | 09.05.2025 | 3 | - | - | முடிக்கப்பட்டது | - | 13 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| XII | 1 | 3.00 | 09.05.2025 | 1 | - | - | முடிக்கப் பட்டது | - | 13 |
| XIII | 10 | 59.86 | 05.05.2025 | 4 | 4 | 2 | 28.2.2026 | - | 13 |
| XIV | 8 | 81.91 | 07.05.2025 | 8 | - | - | முடிக்கப் பட்டது | - | 9 |
| XV | 23 | 251.44 | 09.05.2025 | 18 | 4 | 1 | 28.2.2026 | - | 9 &10 |
| மொத்தம் | 160 | 2070.8 | | 133 | 22 | 3 | | 2 | |

அறிவிப்பு : 40

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த 171 எண்ணிக்கையிலான விளையாட்டு திடல்களில் ஒப்பந்த அடிப்படையில் தற்காலிக பாதுகாவலர்கள் பணியமர்த்தப்படுவார்கள். இதற்கென ரூபாய் 5.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

1 முதல் 15 மண்டலங்களில் ரூ.525.85 இலட்சம் மதிப்பீட்டிற்கு விளையாட்டு திடல்களில் மொத்தம் 179 எண்ணிக்கையிலான பாதுகாவலர்களை பணிக்கு அமர்த்த திருவாளர்கள் ஜெயராம் வென்சர்ஸ் நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்கப்பட்டது. விளையாட்டுத் திடல்களில் பாதுகாவலர்கள் பணியமர்த்தப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர். பணிகள் முடிவுற்றது.

அறிவிப்பு : 41

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள பூங்காக்களில் மக்கள் அதிகமாக பயன்படுத்தும் 70 எண்ணிக்கையிலான பூங்காக்களில் பொதுமக்கள் பயன் பெறும் வகையில், பூங்காவின் ஒரு பகுதியில் கூரை அமைத்து இருக்கை வசதியுடன் கூடிய புத்தகம் வாசிப்பு மண்டலங்கள் (Reading zone) ரூபாய் 2.00 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

பூங்காக்களில் பொதுமக்கள் பயன் பெறும் வகையில், பூங்காவின் ஒரு பகுதியில் கூரை அமைத்து இருக்கை வசதியுடன் புத்தகம் வாசிப்பு மண்டலங்கள் கீழ்கண்டுள்ளபடி 36 இடங்களில் ரூ.198.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் துவக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதில் 5 இடங்களில் மட்டும் பணிகள் நிறுத்தம் செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள 31 இடங்களில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

| மண்டலம் | பணி எண்ணிக்கை | பணியின் மதிப்பு (ரூ. இலட்சத்தில்) | பணி ஆணை வழங்கப்பட்ட நாள் | முடிக்கப்பட்ட பணிகள் | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | 5.5 | 01.08.2025 | 1 | |
| 2 | 2 | 11 | 01.08.2025 | 1 | 1-கைவிடப்பட்டது |
| 3 | 3 | 16.5 | 01.08.2025 | 3 | |
| 4 | 3 | 16.5 | 01.08.2025 | 2 | 1-கைவிடப்பட்டது |
| 5 | 3 | 16.5 | 01.08.2025 | 3 | |
| 6 | 2 | 11 | 11.07.2025 | 1 | 1-கைவிடப்பட்டது |
| 7 | 3 | 16.5 | 11.07.2025 | 3 | |
| 8 | 2 | 11 | 11.07.2025 | 2 | |
| 9 | 2 | 11 | 11.07.2025 | 2 | |
| 10 | 3 | 16.5 | 11.07.2025 | 2 | 1-கைவிடப்பட்டது |
| 11 | 3 | 16.5 | 01.08.2025 | 3 | |
| 12 | 2 | 11 | 01.08.2025 | 2 | |
| 13 | 3 | 16.5 | 01.08.2025 | 3 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 14 | 2 | 11 | 01.08.2025 | 2 | |
| 15 | 2 | 11 | 01.08.2025 | 1 | 1-கைவிடப்பட்டது |
| மொத்தம் | **36** | **198** | | 31 | **5-**<br>**கைவிடப்பட்டது** |

அறிவிப்பு : 42

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட அமைந்துள்ள சாலை மைய தடுப்புகள் மற்றும் சாலை மைய தீவுத் திட்டுகளை அழகுபடுத்த, முதற்கட்டமாக 25 கிலோ மீட்டர் நீளத்திற்கு மண் மற்றும் உரம் இடுதல் மற்றும் பல்வேறு வகையான அலங்காரப் பூச்செடிகள் நடவு செய்து அதனைப் பாதுகாக்கும் வகையில், துருப்பிடிக்காத இரும்பிலான கைப்பிடி (Stainless Steel Hand Rail) அமைக்க ரூபாய்.18.00 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.**

சாலை மைய தடுப்புகள் மற்றம் சாலை மையத்தீவு அழகுபடுத்தும் விதமாக 17 இடங்களில் அலங்காரப் பூச்செடிகளை பாதுகாக்கும் வகையில், துருப்பிடிக்காத இரும்பிலான கைப்பிடிகள் கீழ்கண்டுள்ள அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ள மண்டலங்களில் 15,078 மீட்டர் நீளத்திற்கு ரூ.612.34 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு 5 இடங்களில் பணிகள் முடிவுற்றது. மீதமுள்ள 11 இடங்களில் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. 1 பணி மட்டும் நிறுத்தம் செய்யப்பட்டுள்ளது.

| மண்டலம் | பணியின் எண்ணிக்கை | நீளம் (மீ) | பணியின் மதிப்பு (ரூ. இலட்சத்தில்) | பணி ஆணை வழங்கப் பட்ட நாள் | முடிக்கப் பட்ட பணிகள் | நடை பெறும் பணிகள் | தொடங்கப் படவுள்ள பணிகள் |
|---|---|---|---|---|---|---|---|
| 3 | 1 | 140 | 6.8 | 25.09.2025 | - | 1 | |
| 9 | 2 | 500 | 58.4 | 13.03.2025<br>21.04.2025 | 2 | - | - |
| 10 | 4 | 600 | 163.58 | 11.07.2025 | - | 4 | - |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 12 | 3 | 1280 | 65 | 16.05.2025 | 2 | 1 | - |
| 13 | 1 | 820 | 48.71 | 25.09.2025 | - | - | 1 |
| 14 | 3 | 4074 | 212.15 | 23.07.2025<br>11.09.2025 | 1 | 2 | - |
| 15 | 3 | 5229 | 57.7 | 19.08.2025 | - | 3 | |
| மொத்தம் | **17** | **15078** | **612.3** | | 5 | 11 | 1 |

அறிவிப்பு : 43

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 300 பூங்காக்களை பொதுமக்கள் அதிகம் பயன்படுத்திடும் வகையில், பூங்காக்கள் பழுது பார்க்கும் பணிகளுக்காகவும் மற்றும் மேம்படுத்தும் பணிகளுக்காகவும் ரூபாய் 43.00 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.**

பொதுமக்களை அதிகம் பயன்படுத்திடும் வகையில், 328 பூங்காக்களை பழுது பார்க்கும் பணி மற்றும் மேம்படுத்தும் பணிகள் கீழ்கண்டுள்ள அட்டவணையில் தெரிவித்துள்ளபடி நடைபெற்று வருகிறது.

| மண்டலம் | பணி எண்ணிக்கை | பணியின் மதிப்பு (ரூ. இலட்சத்தில்) | பணி ஆணை வழங்கப் பட்ட நாள் | முடிக்கப் பட்ட பணிகள் | நடைபெறும் பணிகள் | தொடங்கப் படவுள்ள பணிகள் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 9 | 111.48 | 16.05.2025 | 9 | | | |
| 2 | 8 | 92.44 | 16.05.2025<br>19.08.2025 | 7 | 1 | | |
| 3 | 7 | 70.00 | 16.05.2025 | 6 | 1 | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 4 | 45 | 582.98 | 12.06.2025<br>01.08.2025 | 12 | 33 | | |
| 5 | 9 | 163.48 | 12.06.2025 | 4 | 1 | 4 | |
| 6 | 16 | 143.75 | 12.06.2025 | 9 | 5 | 1 | 1 - கைவிடப்பட்டது |
| 7 | 57 | 1136.17 | 21.05.2025<br>01.08.2025<br>21.08.2025 | 15 | 42 | | |
| 8 | 3 | 41.80 | 04.08.2025 | 3 | | | |
| 9 | 2 | 61.87 | 01.08.2025 | 2 | | | |
| 10 | 6 | 3.97 | 12.06.2025 | 3 | | | 3 - கைவிடப்பட்டது |
| 11 | 56 | 1156.00 | 12.06.2025 | 46 | 7 | 3 | |
| 12 | 25 | 56.65 | 13.08.2025 | 19 | 6 | | |
| 13 | 17 | 35.01 | 19.08.2025 | 5 | 11 | 1 | |
| 14 | 38 | 24.17 | 03.10.2025 | 24 | 12 | 2 | |
| 15 | 30 | 1793.00 | 12.06.2025 | 14 | 10 | 6 | |
| மொத்தம் | **328** | **4669.96** | | **178** | **129** | **17** | **4- கைவிடப்பட்டது** |

அறிவிப்பு : 44

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கீழ்காணும் 10 பெரிய பூங்காக்களைத் தேர்வு செய்து அனைத்து வகையான பார்வையாளர்களும், முக்கியமாக பெற்றோருடன் வரும் சிறப்பு குழந்தைகள் உபயோகிக்கும் உள்ளடக்கிய சிறப்பு அம்சங்கள் கொண்ட பூங்காக்களாக மேம்படுத்திட ரூபாய் 3.00 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.**

| **வ.எண்.** | **இடம்** |
|---|---|
| 1 | மண்டலம் 2 வார்டு 19, MMDA பூங்கா |
| 2 | மண்டலம் 3, வார்டு 28, KKR முதல் பிரதான சாலை பூங்கா |
| 3 | மண்டலம் 4. வார்டு 36, வாசுகி நகர் பூங்கா |
| 4 | மண்டலம் 5, வார்டு 52. அண்ணா பூங்கா |
| 5 | மண்டலம் 6 வார்டு 71, முரசொலி மாறன் பூங்கா |
| 6 | மண்டலம் 8,வார்டு 102, அண்ணா நகர் போகன் வில்லா பூங்கா |
| 7 | மண்டலம் 10, வார்டு 133, டாக்டர் நடேசன் பூங்கா. |
| 8 | மண்டலம் 12, வார்டு 156, திருவள்ளுவர் நகர், நாதமுனி தெரு பூங்கா |
| 9 | மண்டலம் 14. வார்டு 191, ஜெயச்சந்திரன் நகர் பூங்கா |
| 10 | மண்டலம் 15, வார்டு 193, ஸ்ரீசாய் நகர் பூங்கா |

அறிவிப்பில் தெரிவித்துள்ளபடி கீழ்கண்டுள்ள பூங்காக்களில் மேம்படுத்தும் பணிகள் குறித்த விபரங்கள் சமர்பிக்கப்படுகிறது. பணிகள் நடைபெற்று வருகிறது.

| மண்டலம் | வார்டு | பணியின் பெயர் | பரப்பளவு (ச. அடி) | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 3 | 27 | பத்மகிரி நகர் மாநகராட்சி பூங்கா | 4340 | - | நிர்வாக அனுமதி பெறப்பட உள்ளது. |
| 3 | 28 | கே.கே.ஆர் பூங்கா, 2வது பிரதான | 4352 | 118.73 | பணிகள் நடைபெற்று வருகிறது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | சாலை, மாதவரம். | | | |
| 4 | 36 | வாசுகி நகர் | 1150 | 130 | பணிகள் நடைபெற்று வருகிறது. |
| 5 | 52 | அண்ணா பூங்கா | 1050 | - | நிர்வாக அனுமதி பெறப்பட உள்ளது. |
| 7 | 91 | மில்லேனியம் பூங்கா | | | நிர்வாக அனுமதி பெறப்பட உள்ளது. |
| 8 | 102 | போகன்வில்லா பூங்கா, அண்ணா நகர் | 1650 | 110 | நிர்வாக அனுமதி பெறப்பட உள்ளது. |
| 10 | 133 | நடேசன் பூங்கா | 1200 | 93 | நிர்வாக அனுமதி பெறப்பட உள்ளது. |
| 12 | 156 | திருவள்ளுவர் நகர் பூங்கா | 4806 | 134 | 20.02.2026ல் பணி ஆணை வழங்கப்பட உள்ளது. |
| 14 | 191 | ஜெயச்சந்திரன் முதல் தெரு பூங்கா | 5880 | 137.4 | 20.02.2026ல் பணி ஆணை வழங்கப்பட உள்ளது. |
| 15 | 193 | ஸ்ரீ சாய் நகர், துரைப்பாக்கம் | 5495 | - | நிர்வாக அனுமதி பெறப்பட உள்ளது. |
| | | **மொத்தம்** | **44623** | **723.13** | |

அறிவிப்பு : 45

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட வடசென்னைப் பகுதி வாழ் இளைஞர்களின் விளையாட்டுத் திறனை மேம்படுத்தும் வகையில் மண்டலம்-2, வார்டு 16ல் ஆண்டார் குப்பம் ஏலந்தனூார், சடையன்குப்பம் - பர்மா நகர் ஆகிய இரண்டு இடங்களில் புதியதாக இறகுப் பந்து உள்விளையாட்டரங்கம் அமைக்க ரூபாய் 2.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

தலா ஒரு எண்ணிக்கையிலான உள்ளரங்க இறகுப்பந்து கூடம் அமைக்கும் பணி, மண்டலம்-2 கோட்டம்-16, பர்மா நகரில் ரூ.118 இலட்சம் மதிப்பீட்டிலும், ஆண்டார் குப்பம் இலந்தனூரில் ரூ.132 இலட்சம் மதிப்பீட்டிலும் அமைக்கப்பட்டு வருகிறது. தற்போது 68% முடிவடைந்துள்ளது. 28.02.2026க்குள் பணிகள் முடிக்கப்படும். பணிகள் நடைபெற்று வருகிறது.

அறிவிப்பு : 46

**பெருநகர சென்னை மாநகராட்சி நுழைவாயில்கள் மற்றும் முக்கிய சந்திப்புகளில் 10 இடங்களைத் தேர்வு செய்து, அங்கு மின் ஒளியுடன் கூடிய செயற்கை நீரூற்றுகள் ரூபாய் 5.00 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

மண்டலம்-1, 2, 4, 5 மற்றும் 6ல் 8 இடங்களில் ரூ.134.30 இலட்சம் மதிப்பீட்டில் பெருநகர சென்னை மாநகராட்சி நுழைவாயில்கள் மற்றும் முக்கிய சந்திப்புகளில் மின் ஒளியுடன் கூடிய செயற்கை நீரூற்றுகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு தற்போது 6 இடங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன. 2 இடங்களில் பணிகள் துவக்கப்படவுள்ளது. பணிகள் நடைபெற்று வருகிறது.

அறிவிப்பு : 47

**பெருநகர சென்னை மாநகராட்சி பூங்காக்களுக்கு நடைபயிற்சி மற்றும் பொழுதுபோக்கிற்காக வரும் பொதுமக்கள், தங்கள் களைப்பினைப் போக்கி புத்துணர்வு பெறும் வகையில், பூங்காக்களில் சுய உதவிக் குழுக்களால் தரமான மற்றும் சுகாதாரமான உணவு மையங்கள் அமைக்கப்படும்.**

பூங்காக்களில் சுய உதவிக் குழுக்களால் தரமான மற்றும் சுகாதாரமான உணவு மையங்கள் நான்கு இடங்களில் அமைக்க கீழ்கண்டுள்ள பூங்காக்கள் தேர்வு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

| மண்டலம் | வார்டு | பணியின் பெயர் | பணியின் தற்போதைய நிலை (%) | குறிப்பு |
|---|---|---|---|---|
| 5 | 62 | மே தின பூங்கா சிந்தாதரிபேட்டை | 100 | பணி முடிவடைந்தது |
| 5 | 52 | அறிஞர் அண்ணா பூங்கா, இராயபுரம் | 70 | பணி நடைபெறுகிறது |
| 6 | 71 | முரசொலி மாறன் பூங்கா, பெரம்பூர் | 15 | பணி நடைபெறுகிறது |
| 9 | 109 | கில் நகர் பூங்கா, சூளை மேடு | 80 | பணி நடைபெறுகிறது |
| 10 | 127 | ஜெய் நகர் பூங்கா, சூளைமேடு | 100 | பணி முடிவடைந்தது |
| 10 | 136 | சிவன் பூங்கா, கோயம்பேடு | | பெருநகர சென்னை மாநகராட்சி நிதியை கொண்டு பணி மேற்கொள்ள கொள்கை ரீதியாக ஆணையரின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது, மதிப்பீடு நிலையில் உள்ளது |
| 10 | 133 | நடேசன் பூங்கா, கே.கே. நகர் | | |
| 7 | 88 | மில்லேனியம் பூங்கா, தி.நகர் | | |
| 8 | 101 | டவர் பூங்கா, அண்ணா நகர் | | |
| 8 | 102 | போகன்வில்லா பூங்கா, அண்ணா நகர் | | |

# திடக்கழிவு மேலாண்மைத் துறை

அறிவிப்பு : 48

**பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் அகழ்ந்தெடுக்கும் பணி (Bio Mining) மூலம் மீட்டெடுத்த நிலத்தில், இரண்டு ஏக்கர் பரப்பளவு உள்ள இடத்தில், 2 எண்ணிக்கையில், ஒவ்வொன்றும் தலா 50 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட காற்று புகும் வகையில் பதனம் செய்யும் உரம் ரூபாய் 14.00 கோடி (Windrow Compost Plant) மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

பெருங்குடியில் தலா 50 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட இரண்டு உரம் தயாரிக்கும் கூடம் அமைக்க ரூ.13.6 கோடிக்கு மன்றத்தின் மூலம் 30.04.2025 நாளிட்டு நிர்வாக அனுமதி பெறப்பட்டது. ஒப்பம் கோரப்பட்டு திருவாளர்கள் C.R.Constructions என்ற நிறுவனத்திற்கு 01.08.2025 அன்று பணி ஆணை வழங்கப்பட்டு, தற்போது கட்டுமான பணிகள் 40% முடிவடைந்துள்ளது. மார்ச் 2026க்குள் கட்டுமான பணிகள் முடிக்கப்படும். பணிகள் நடைபெற்று வருகிறது.

அறிவிப்பு : 49

**குப்பை கொட்டும் வளாகத்தில் நெகிழிகளை கொட்டுவதைத் தவிர்க்க ஏற்கனவே, ஐந்து மண்டலங்களில் தலா 10 மெட்ரிக் டன் திறன் கொண்ட நெகிழி சிப்பமாக்கல் மையங்கள் (Plastic Baling Centre) இயங்கி வருகின்றன. மேலும், இப்பணிகள் இதர 10 மண்டலங்களில் (மண்டலம்1,3,4,8,9,10,11,12,13 மற்றும் 15) தலா 10 மெட்ரிக் டன் திறன் கொண்ட நெகிழி சிப்பமாக்கல் மையங்கள் மதிப்பீட்டில் ரூபாய் 22.25 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

ஆணையர் அவர்களின் அறிவுறுத்தலின்படி வடக்கு மற்றும் தெற்கு வட்டாரத்தில் 1 ஏக்கர் நிலத்தில் தலா 50 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட ஒரு மெகா பேலிங் மையம் நிறுவ அறிவுறுத்தப்பட்டது.

அதன்படி, வடக்கு மற்றும் தெற்கு வட்டாரங்களிலிருந்து இடம் தேர்வு செய்யப்பட்டு திடக்கழிவு மேலாண்மை துறையின் தலைமையகத்தின் மூலம் ரூ.9.2 கோடிக்கு வடக்கு வட்டாரத்தில், மண்டலம்-2, மணலியில் ஒரு பேலிங் மையத்தை நிறுவ, ஒப்பம் கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த திருவாளர்களஎ. Pearl Constructions Ltd., அவர்களுக்கு 23.12.2025 அன்று பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. 30.01.2026 அன்று பணி துவங்கப்பட்டுள்ளது.

தெற்கு வட்டாரத்தில் மண்டலம்-14, பள்ளிக்கரனையில் ரூ.12.29 கோடிக்கு பேலிங் மையம் நிறுவ ஒப்பம் கோரப்பட்டது. அதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த திருவாளர்.Thomas Ayyadurai அவர்களுக்கு 23.12.2025 அன்று பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. 03.01.2026 அன்று பணி துவங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

இயந்திர பொறியியல் துறையின் மூலம், பேலிங் இயந்திரங்களை கொள்முதல் செய்ய திருவாளர்கள்.Seven Hills Group of Comapanies-க்கு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

## சிறப்புத் திட்டங்கள் துறை

அறிவிப்பு : 50

**மேம்பாலங்கள் மற்றும் இரயில்வே மேம்பாலங்களின் கீழ்ப்பகுதியினை உகந்த முறையில் அழகுபடுத்திட ரூபாய் 42.00 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.**

மேம்பாலம் மற்றும் இரயில்வே மேம்பாலங்களின் கீழ் அழகுபடுத்தும் பணிகள் கீழ்கண்டுள்ளவாறு மேற்கொள்ளப்பட்டுள்ளது. பணிகள் நடைபெற்று வருகிறது.

| பணி மேற்கொள்ளப்படும் மேம்பாலம் | மதிப்பீடு (ரூ. கோடியில்) | பணி ஆணை வழங்கப்பட்ட நாள் | தற்போதைய நிலை (%) | பணி நிறைவடையும் காலம் |
|---|---|---|---|---|
| மியூசிக் அகாடமி மேம்பாலம் | 4.68 | 03.01.2025 | 59 | 31.03.2026 |
| டவுடன் மேம்பாலம் | 3.38 | 25.03.2025 | 55 | 25.03.2026 |
| பீட்டர்ஸ் சாலை-கான்ரான்ஸ்மித் சாலை மேம்பாலம் | 2.87 | 23.06.2025 | 85 | 23.06.2026 |
| G.N. செட்டி சாலை கலைவாணர் மேம்பாலம் | 3.88 | 07.04.2025 | 50 | 07.04.2026 |
| ரங்கராஜபுரம் மேம்பாலம் | 2.63 | 25.03.2025 | 40 | 25.03.2026 |
| சிவானந்த சாலை, MRTS மேம்பாலம் | 4.91 | 12.06.2025 | 20 | 12.06.2026 |
| ஆழ்வார்பேட்டை-மேம்பாலம் | 4.16 | 07.10.2026 | 25 | 07.10.2026 |
| வடக்கு உஸ்மான் சாலை மேம்பாலம் | 3.9 | 07.10.2026 | 20 | 07.10.2026 |

## கட்டடத் துறை

அறிவிப்பு : 51

நீத்தார் உடல் பாதுகாப்பு மையம் தனியார் பங்களிப்புடன் வருவதைப் போன்று, வடக்கு வட்டாரத்தில் மூலக்கொத்தளம் மயான (PPP-Mode) வேலங்காடு மயான பூமியில் தற்போது செயல்பட்டு பூமியிலும் மற்றும் தெற்கு வட்டாரத்தில் பெசன்ட் நகர் மயான பூமியிலும் PPP-Mode முறையில் செயல்படுத்தப்படும்.

மூலக்கொத்தளம் - 17.06.2025 மற்றும் 01.07.2025 ஆகிய நாட்களில் ஒப்பம் கோரப்பட்ட நிலையில் யாரும் ஒப்பம் கோர முன்வராததால், நீத்தார் உடல் பாதுகாப்பு மையம் DBFOT - PPP முறையில் வார்டு-53, மண்டலம் -5ற்கு பதிலாக வார்டு -37, மண்டலம்- 4, முல்லை நகர் மயான பூமியில் மாற்றம் செய்ய மன்றத்தின் அனுமதி 29.08.2025 அன்று பெறப்பட்டது. ஒப்பம் 24.10.2025 அன்று திறக்கபட்டது. ஒப்பந்ததாரர் ஒப்ப ஏற்ப்புக்கு யாரும் முன்வரததால் மண்டலம்-3க்கு மாற்றம் செய்ய ஒப்புதல் வேண்டி கோப்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பணிகள் நடைபெற்று வருகிறது.

பெசன்ட் நகர் - மயான பூமியில் இப்பணியை மேற்கொள்ள இயலாத காரணத்தினால், அதற்கு மாற்றாக மண்டலம்-10 வார்டு-139, ஜோன்ஸ் சாலை, சைதாப்பேட்டையில் உள்ள மயான பூமியில் இப்பணி தொடங்குவதற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டி குறிப்பு அனுப்பப்பட்டுள்ளது. பணிகள் துவக்கப்பட வேண்டும்.

## மின்துறை

அறிவிப்பு : 52

**பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் செயல்படும். 52 சென்னை உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு, மின்னாக்கி (Generator) ரூபாய் 4.70 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

சென்னை உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு, மின்னாக்கி (Generator) அமைக்க ரூ.6.59 கோடி மதிப்பீட்டில் 8 ஒப்பங்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. பணிகள் நடைபெற்று வருகிறது.

அறிவிப்பு : 53

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 18 இடங்களில் உள்ள வாகனப் போக்குவரத்து சுரங்கப்பாதைகளில், மழைநீரை உடனுக்குடன் அகற்றுவதற்கு, புதிய டீசல் மோட்டார்கள், மின்மோட்டார்கள், மின்னாக்கி (Generator) அமைக்கப்படும். மேலும், சுரங்கப்பாதைகளில் வர்ணங்கள் பூசப்பட்டு வண்ணமிகு வரைப்படங்கள் வரைந்து மின் விளக்குகளால் அழகுபடுத்தும் பணிகளுக்காக ரூபாய் 14.40 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

மின்துறை மூலம் 17 சுரங்கப்பாதைகளில் மின் மோட்டார்கள், ஜெனரேட்டர்கள் மற்றும் மின்விளக்குகள் அமைக்கும் பணிக்கு ரூ.6.78 கோடி மதிப்பீட்டில் பாலங்கள் துறை மூலம் 9 ஒப்பங்கள் கோரப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. 6 சுரங்கப்பாதைகளின் பணி முடிக்கப்பட்டுள்ளது. 11 சுரங்கப்பாதைகளில் பணிகள் நடைபெற்று வருகிறது.

## தகவல் தொழில்நுட்பம்

அறிவிப்பு : 54

**பொதுமக்களுக்கு பல்வேறு சேவைகளை விரைவாகவும் எளிதாகவும் வழங்குவதற்கு வாட்ஸ்அப் (WhatsApp) அடிப்படையிலான தகவல் தொடர்புகளை உருவாக்கிட, ரூபாய் 4.46 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

பொது மக்களுக்கு பல்வேறு சேவைகளை விரைவாகவும் எளிதாகவும் வழங்கும்பொருட்டு, வாட்ஸ்ஆப் சேவைகள் மான்புமிகு மேயர் அவர்களால் 25.08.2025 அன்று துவக்கிவைக்கப்பட்டுள்ளது. பணிகள் முடிவுற்றது.

## ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம் (ICCC)

அறிவிப்பு : 55

**முத்தமிழறிஞர் கலைஞர் மு. கருணாநிதி மாளிகையில் செயல்பட்டு வரும் ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில் விரிவாக்கப்பட்ட புதிய Video Wall திரை அமைக்கப்படும். இதற்கென ரூபாய் 2.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில் ஏற்கனவே, அமைக்கப்பட்டிருந்த Video Wall திரை 5 வருடங்களாக பயன்பாட்டில் இருந்த காரணத்தால், தற்போது ICCC துறை முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி நூற்றாண்டு கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. புதிய இடத்திற்கு ஏற்றவாறு மேம்படுத்தப்பட்ட புதிய Video Wall திரை ரூ.2.97 கோடி மதிப்பீட்டில் மூலதன நிதியிலிருந்து மேம்படுத்தப்பட்ட Video Wall திரை பொருத்தப்பட்டது. பணிகள் முடிவுற்றது.

அறிவிப்பு : 56

**சென்னை மாநகராட்சியின் சிறந்த வாகனப் பெருநகர போக்குவரத்து மேலாண்மைக்காக, டிஜிட்டல் முறையில் ஸ்மார்ட் பார்க்கிங் வசதி பொது மற்றும் தனியார் பங்களிப்பு (Public Private Partnership) முறையில் அமைக்கப்படும். இதனால்,வாகன நெரிசல்கள் குறைவதுடன் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு கூடுதல் வருவாய் ஏற்படுத்தப்படும்.**

மெரினாவில் ஸ்மார்ட் பார்க்கிங் வசதியை, பொதுத் தனியார் பங்களிப்பு (PPP) வழியாக படிப்படியாக செயல்படுத்த ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு துறையின் வழியாக நடவடிக்கை எடுக்க ஆரம்பத்தில் திட்டமிடப்பட்டது. தற்போது இப்பணியை சிறப்பு திட்டங்கள் துறையில் நடைவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பணிகள் நடைபெற்று வருகிறது.

அறிவிப்பு : 57

பெருநகர சென்னை மாநகராட்சியால் பல்வேறு இடங்களில் ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள மின்னணு அறிவிப்புப் பலகைகளைத் தொடர்ந்து தனியார் கூட்டாண்மை (Public Private Partnership) முறையில் ரூபாய் 9.00 கோடி முதலீட்டிலும், பெருநகர சென்னை மாநகராட்சியின் நிதியிலிருந்து ரூபாய் 6.00 கோடி செலவினத்திலும், கூடுதலாக 100 எண்ணிக்கையிலான மின்னணு அறிவிப்புப் பலகைகள் (Variable Messaging Display) அமைக்கப்பட்டு விழிப்புணர்வு செய்திகள், அரசு விளம்பரங்கள், மற்றும் தனியார் விளம்பரங்கள் ஆகியன இடம்பெறச் செய்து அதன் வாயிலாக கூடுதல் வருவாய் ஈட்டப்படும்.

மின்னணு அறிவிப்புப் பலகைகள் (Variable Messaging Display) அமைக்கப்பட்டு விழிப்புணர்வு செய்திகள், அரசு விளம்பரங்கள், மற்றும் தனியார் விளம்பரங்கள் ஆகியன இடம்பெறச் செய்வதற்கான பணியை தனியார் கூட்டாண்மை முறையில் (PPP) முறையில் மேற்கொள்ள TNIDB அரசுத் துறையின் அனுமதி வேண்டி அறிக்கை மற்றும் கடிதம் அனுப்பப்பட்டது. தற்போது கட்டடத் துறையில் விளம்பரம் தொடர்பான மின்னணு செயல்பாட்டில் உள்ளதால் அறிவிப்பில் தெரிவித்துள்ள பணிகள் தற்காலிகமாக நிறுத்தம் செய்யப்பட்டுள்ளது. பணி கைவிடப்பட்டது.

அறிவிப்பு : 58

பெருநகர சென்னை மாநகராட்சியை குப்பையில்லா தூய்மையான நகரமாக மாற்றுவது அவசியமாகிறது. இதனால் குப்பை கொட்டும் இடங்களில் குப்பைகளை உடனுக்குடன் அகற்றுவதை கண்காணித்திட கூடுதலாக 400 எண்ணிக்கையிலான கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்படும். இதற்கென ரூபாய் 1.00 கோடி நிதி ஒதுக்கப்படும்.

பெருநகர சென்னை மாநரகாட்சி, திடக்கழிவு மேலாண்மை துறையின் வாயிலாக தூய்மையான நகரமாக மேம்படுத்த திடக்கழிவு அகற்றும் இடங்களில் கூடுதலாக கண்காணிப்பு கேமராக்கள் நிறுவுவதற்கு ரூ.3.99 கோடி மதிப்பீடிற்கு ஒப்பம் நிறைவுசெய்யப்பட்டு, 446 கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளது. பணிகள் முடிவுற்றது.

அறிவிப்பு : 59

**தலைமையிடத்தில், பொது வெளியில் பெருநகர சென்னை மாநகராட்சி அமைக்கப்பட்டிருக்கும் ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தைப் (ICCC) போன்று, மூன்று வட்டார அலுவலகங்களிலும் வட்டார ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையங்கள் (RICCC) உருவாக்கப்படும். இதனால், நிறுவப்பட்டுள்ள கண்காணிப்பு கேமராக்கள் வழியாக பெறப்படும் குறைபாடுகள் மீது, சம்மந்தப்பட்ட வட்டார துணை ஆணையர் அவர்களால்,உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க இயலும். இதற்காக ரூபாய் 3.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

பெருநகர சென்னை மாநகராட்சி, தலைமையிடத்தில் செயல்படும் ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாடு மையத்தை (ICCC) போன்று 3 வட்டார துணை ஆணையர் அலுவலகங்களில் தனித்தனியாக வட்டார ஒருங்கிணைந்த கட்டணை மற்றும் கட்டுப்பாட்டு மையங்கள் ரூ3.79 கோடி மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ளது. இம்மையம் தலைமையகத்தில் அமைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்துடன் இணைக்கப்பட்டது. பணிகள் முடிவுற்றது.

## மன்றத் துறை

அறிவிப்பு : 60

**2025- 26ஆம் நிதியாண்டு முதல் பெருநகர சென்னை மாநகராட்சி மாண்புமிகு மேயர் சிறப்பு மேம்பாட்டு நிதி ரூபாய் 3.00 கோடியிலிருந்து ரூபாய் 4.00 கோடியாக உயர்த்துவதற்கு , இந்நிதியில் மேற்கொள்ளப்படும் புதிய பணிகள் குறித்து உரிய வழிகாட்டுதல்களை மேற்கொள்வதற்கு அரசுக்கு முன்மொழிவு அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.**

மாண்புமிகு மேயர் சிறப்பு மேம்பாட்டு நிதி ரூ.3 கோடியிலிருந்து ரூ.4 கோடியாக உயர்த்துவது தொடர்பான கருத்துரு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. பணிகள் நடைபெற்று வருகிறது.

அறிவிப்பு : 61

**2025 -26 ஆம் நிதியாண்டு முதல் பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின் வார்டு மேம்பாட்டு நிதி ரூபாய் 50.00 இலட்சத்திலிருந்து ரூபாய் 60.00 இலட்சமாக உயர்த்தப்படும்.**

பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின் வார்டு மேம்பாட்டு நிதி ரூ.50 இலட்சத்திலிருந்து ரூ.60 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. பணிகள் முடிவுற்றது.

# நிதித் துறை

அறிவிப்பு : 62

**2025 - 26 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் காலநிலை முதலீடுகள் குறித்த அறிக்கை, பெருநகர சென்னை மாநகராட்சியால் வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளது.**

2025- 26ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் காலநிலை முதலீடுகள் குறித்த அறிக்கையை C40 தனியார் நிறுவனம் மூலம் தலையகத்தில் உள்ள அனைத்து பொறியியல் துறையிலிருந்து காலநிலை தொடர்பான பணி விபரங்கள் குறித்த புள்ளி விபரங்கள் பெற்று அறிக்கை சமர்பிக்கப்பித்துள்ளார்கள். அறிக்கை மாண்புமிகு மேயர் அவர்களால் 16.02.2026 அன்று வெளியிடப்பட்டது. 2026-27ஆம் நிதியாண்டிலிருந்து அறிக்கையில் பெறப்பட்ட புள்ளி விபரங்களின் அடிப்படையில் பணிகள் நடைபெறுவதை கண்காணிக்க இந்த அறிக்கை பயன்படும். பணிகள் முடிவுற்றது.